Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 469 / 2024

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜெயந்தி | Calling: | இல்லத்தரசி |
| Father's Name: | பௌன்குமார் | Religion: | |
| Village: | வாணியம்பாடி | Age: | 47 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 12.09.2025

**எதிரி ஆஜர்**

பு.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி (அ.சா.1 ன் குறுக்கு விசாரணையை எதிரிதரப்பு வழக்கறிஞர் STC 470 /2024 க்கும் இதே குறுக்கு விசாரணையை பதிவு செய்துக்கொள்ளுமாறு கூறியதால் இதே குறுக்கு விசாரணை பதிவு செய்யப்படுகிறது.)

எனக்கு வங்கி பரிவர்த்தனை நடைமுறைகள் நன்கு தெரியும் என்றால் சரிதான். Income tax மற்றும் RBI விதிமுறைகளின் படியும் இரண்டு இலட்சத்திற்கு மேல் செய்யும் பரிவர்த்தனைகள் அனைத்து வங்கியில் தான் செய்யவேண்டும் என்று தெரியுமா என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. எதிரி வீரய்யாவிற்கு கைமாறாக கொடுத்ததாக சொல்லப்படும் பணம் ஒன்பது லட்சம் எப்படி வந்தது என்றால் அது என்னுடைய சேமிப்பு பணம். எதிரிக்கு இந்திராவிற்கு கைமாறாக கொடுத்ததாக சொல்லப்படும் பணம் ஒன்பது லட்சம் எப்படி வந்தது என்றால் அது என்னுடைய சேமிப்பு பணம். வங்கியில் சேமித்து வைத்த பணமா என்றால் இல்லை, என் சகோதரரிடம் கொடுத்து வைத்திருந்த பணம், அதை வாங்கி கொடுத்தேன். என் சகோதரரின் பெயர்

என்னவென்றால் செந்தில் குமார், வாணியம்பாடி. செந்தில் குமார் 17 இலட்சம் ரூபாய்யை வங்கியில் வைத்திருந்தாரா அல்லது கையிருப்பாக வைத்திருந்தாரா என்றால் கையிருப்பாக வைத்திருந்தார். எதிரி வீரய்யாவிற்கு செந்தில் குமாரிடம் இருந்த பணத்தை எப்போது, எந்த தேதியில் வாங்கி கொடுத்தேன் என்றால் செப்டம்பர் 2023, முதல் வாரம், தேதி தெரியவில்லை. எதிரி வீரய்யாவிற்கு முதலில் பணம் கொடுத்தாக சொல்கிறேனா அல்லது எதிரி இந்திராவிற்கு முதலில் பணம் கொடுத்தாக சொல்கிறேனா என்றால் வீரய்யா. வீரய்யாவிற்கு பணம் கொடுத்ததாக சொன்னபோது என்னென்ன ஆவணங்கள் வாங்கினேன் என்றால் ஆவணங்கள் வாங்கவில்லை, நம்பிக்கையின் பேரில் தான் கொடுத்தேன். இந்திராவிடம் பணம் கொடுத்ததாக சொன்னபோது என்னென்ன ஆவணங்கள் வாங்கினேன் என்றால் ஆவணங்கள் வாங்கவில்லை, நம்பிக்கையின் பேரில் தான் கொடுத்தேன். எதிரிகளின் ஆதார் கார்ட் நகல் வாங்கிவைத்துள்ளேனா என்றால் பாலிசி போட்டதற்காக வாங்கி வைத்தேன். எதிரி வீரய்யாவிற்கு பணம் கொடுத்ததாக பிரமாண வாக்குமூலத்தில் நான்காவது பத்தியில் செப்டம்பர் 2024 ல் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த ஆறு மாதம் எப்போது முடிவடைகிறது என்றால் மார்ச்சில் முடிவடையும். ஆறு மாதத்தில் பணம் கொடுக்காதற்காக எதேனும் சட்டநடவடிக்கைகள் எடுத்தேனா என்றால் இல்லை. எதிரி வீரய்யாவிற்கு கொடுத்த பணமே திரும்ப வராத நிலையில் எதிரி இந்திராவிற்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய்யான தகவல் என்றால் சரியல்ல. நான் எதிரிகள் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் அதை உறுதிப்படுத்தும் நிலையில் அதற்கான சாட்சிகள் யாரேனும் உள்ளார்களா என்றால் அவர்கள் கணவர் , மனைவி இருவரும் தான் சாட்சி. எதிரி வீரய்யாவின் காசோலையை யார் பூர்த்தி செய்தது என்றால் அவரே தான் பூர்த்தி செய்து கொண்டு வந்து என் முன்னால் கையொப்பம் இட்டு கொடுத்தார். எதிரி இந்திராவின் காசோலையை யார் பூர்த்தி செய்தது என்றால் அவரே தான் பூர்த்தி செய்து கொண்டு வந்து என் முன்னால் கையொப்பம் இட்டு கொடுத்தார். STC 470/2024 வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் முன்றாவது பத்தியில் எதிரியின் வீட்டில் வைத்து ரூபாய் எட்டு லட்சம் கொடுத்ததாக உள்ளது என்றால் ஆமாம், வீட்டில் வைத்துதான் கொடுத்தேன். STC 469/2024 வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் முன்றாவது பத்தியில் எதிரியின் வீட்டில் வைத்து ரூபாய் ஒன்பது லட்சம் கொடுத்ததாக உள்ளது என்றால் ஆமாம், வீட்டில் வைத்துதான் கொடுத்தேன். மேற்படி இரண்டு வழக்குகளிலும் உள்ள புகார் மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றாலும்

அதுபோன்ற ஒரு நிகழ்வு நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. புகார் மனுவில் ஆறாம் பத்தியில் எதிரிகளை பார்த்து காசோலை தொகையை கேட்டதாக சொல்லியுள்ள நிலையில் எதிரிகளை வீட்டிற்கோ அல்லது வேலை செய்யும் இடத்திற்கு போனால் தான் அவர்களை பார்க்கமுடியும் என்கிற நிலையில் எங்கு சென்று பணம் கேட்டேன் என்றால் ஆறுமாதம் கழித்து அவர்கள் வீட்டிற்கு சென்றுதான் கேட்டேன். 18.09.2024 ம் தேதியில் எதிரிகளின் வீட்டிற்கு சென்று காசோலையை கேட்ட போது அவர்கள் வீட்டில் வைத்து கொடுத்து காசோலையை கொடுத்தார்களா என்றால் இல்லை, 18.09.2024 ம் தேதியில் எதிரிகள் தான் காசோலையை பூர்த்தி செய்து என் வீட்டிற்கு வந்து என் முன்னால் கையொப்பம் செய்து கொடுத்தார்கள். நான் எதிரிகளை அவர்கள் வீட்டில் போய் சந்தித்ததாக சொல்லப்படும் தேதி என்னவென்றால் ஆகஸ்ட் மாதம் 30 ம் தேதி. எதிரி இந்திராவின் வங்கி கணக்கில் இருந்து என்னுடைய வங்கிகணக்கிற்கு எதாவது பண பரிவர்த்தனை நடந்துள்ளாதா என்றால் நடந்திருக்கிறது. என்னுடைய எந்த வங்கி கணக்கிற்கு பண பரிவர்த்தனை நடந்தது என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளையில் நடந்துள்ளது. எதிரி வீரய்யாவின் வங்கி கணக்கில் இருந்து என்னுடைய வங்கிகணக்கிற்கு எதாவது பண பரிவர்த்தனை நடந்துள்ளாதா என்றால் நடந்திருக்கிறது. என்னுடைய எந்த வங்கி கணக்கிற்கு பண பரிவர்த்தனை நடந்தது என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளையில் நடந்துள்ளது. எதிரி இந்திராவின் வங்கி கணக்கில் இருந்து என்னுடைய வங்கிகணக்கிற்கு எந்தெந்த காலக்கட்டத்தில் , என்ன காரணத்திற்காக எவ்வளவு தொகை பணபரிவர்த்தனை செய்யப்பட்டது என்றால் முகவராக பணிபுரிந்த காலக்கட்டத்தில் வாடிக்கையாளரின் பணத்தை எனது வங்கி கணக்கில் செலுத்தி அதன் பிறகு வாடிக்கையாளருக்கு பாலிசி டாக்குமண்ட் ஆக வாடிக்கையாளருக்கு கொடுத்துவிடுவோம். நான் வேலை செய்த SBI LIFE INSURENCE க்கு என தனியாக அக்கொண்ட் உள்ளதா என்றால் இல்லை. SBI LIFE INSURENCE க்கு செலுத்தவேண்டி பணத்தை தனிப்பட்ட சேமிப்பு கணக்கிற்கு செலுத்தியதாக கூறியது தவறு என்றால் சரியல்ல. எதிரி வீரய்யாவின் வங்கி கணக்கில் இருந்து என்னுடைய வங்கிகணக்கிற்கு எந்தெந்த காலக்கட்டத்தில் , என்ன காரணத்திற்காக எவ்வளவு தொகை பணபரிவர்த்தனை செய்யப்பட்டது என்றால் எதிரி வீரய்யாவின் வங்கி கணக்கை அவர் மனைவி தான் பயன்படுத்திக்கொண்டுதார் ஏன் என்றால் வீரய்யாவின் மனைவி முகவராக இருந்ததால் அவருடைய வங்கி கணக்கின் மூலம் சில பரிவர்த்தணைகளை செய்யமுடியாது என்பதால் அவருடைய வங்கி கணக்கை பயன்படுத்தி

கிட்டத்தட்ட 30 லட்சம் ரூபாய் பண பரிவர்த்தனை செய்திருப்பார். எதிரிகள் இந்திரா, வீரய்யா ஆகியோர் வங்கி கணக்கில் இருந்து எனது வங்கி கணக்கிற்கு வந்த மொத்த பணத்தையும் SBI LIFE INSURENCE ற்க்கு பணத்தை ஒப்படைத்துவிட்டு அதற்கான ஆவணங்களை வைத்துள்ளேனா என்றால் வாடிக்கையாளருக்கு அனுப்பிய தகவல்களை மட்டும் தான் நான் வைத்துள்ளேன், மேற்படி ஆவணங்கள் வாடிக்கையாளருக்கு நேரடியாக சென்றுவிடும். மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.என் பிரமான மனுவிலும் முதன்மை வாக்குமூலத்திலும் எதிரிகளுக்கும் எனக்கும் SBI LIFE INSURENCE மூலமாக தான் பழக்கம் ஏற்பட்டது என்ற விவரத்தை சொல்ல மறுத்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் கூறியுள்ளேன்.மேற்படி விவரத்தை என் பிரமான மனுவிலும் முதன்மை வாக்குமூலத்திலும் சொல்லாமல் மறைத்துவிட்டேன் என்றாலும் கூறியிருந்தால் வழக்கிற்கு பாதங்கம் ஆகிவிடும் என்று மறைத்தேன் என்றாலும் சரியல்ல. எதிரி இந்திரா என் மீது வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 29.08.2024 ம் தேதி புகார் கொடுத்துள்ளார் என்றாலும் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றாலும் சரிதான். விசாரணை முடிவு என்னவென்றால் நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்கிறோம் என்று வந்துவிட்டோம். எதிரி இந்திரா மேல் திருப்பத்தூர் மாவட்ட குற்றபிரிவு அலுவலகத்தில் காசோலை கொடுத்து பணம் வாங்கிக்கொண்டு போனதாக புகார் அளித்தேன் என்றாலும் அதன் பேரில் அவர்களை அழைத்து விசாரித்தார்கள் என்றாலும் சரிதான்.அந்த புகாரின் மீது என்ன முடிவு என்றால் நீதிமன்றத்தின் மூலம் பார்த்துக்கொள்ளும் படி கூறிவிட்டார்கள். இன்றைய தினத்தில் இருந்து சுமார் 15 நாட்கள் முன்பு வேலூர் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கூறிய புகார்கள் அனைத்தும் முடிவுக்கு வரவில்லை என்றாலும் நிலுவையில் உள்ளது என்றாலும் சரிதான், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது அதனால் முடிவுக்கு வரவில்லை. நான் திருப்பத்தூர் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் எதிரி இந்திராவின் மீது கொடுத்த புகாரின் மீது விசாரணை செய்ய 16.09.2024 ம் தேதி அன்று எதிரி இந்திராவை வரசொல்லி அழைப்பானை அனுப்பியநிலையில் எத்தனை நாட்களுக்கு முன்பு நான் எதிரியின் மீது புகார் கொடுத்தேன் என்றால் 10.09.2024. செப்டம்பர் 2024 முதல் இதுநாள் வரை போலிஸ் புகார் என விரோதமாக போய்விட்டதால் நானும் எதிரிகளும் சந்திக்கவில்லை என்றால் சரிதான், புகார் கொடுத்தற்கு பின்பு ஒரே ஒரு முறை அவர்கள் என் வீட்டிற்கு வந்து பார்த்தார்கள். நான் வழக்கிற்காக பொய்

கூறுகிறேன் என்றாலும் இருவரும் போலிஸ் புகாருக்கு பிறகு சந்தித்தாக சொல்வது சாத்தியமில்லை என்றால் சரியல்ல. எதிரி இந்திரா 23.09.2024 ம் தேதி வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், குடியாத்தம் நகர காவல் நிலையத்திலும், குடியாத்தம் மாவட்ட துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் மோசடி செய்தது சம்மந்தமாக என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான், லைப் இன்சுரன்ஸ் சம்மந்தமாக தான் கேட்டார்கள்.

(கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் இரண்டாவது முறையாக குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக கேட்டு மீண்டும் ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ஜெயந்தி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K